**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.33/2014**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 23–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.5–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | **: கார்த்திக்** | **தொழில்** | **:** |
| **த/பெ.** | **:** | **வட்டம்** | **:** |
| **முகவரி** | **:** | **மதம்** | **:** |
| **ஜாதி** | **:** | **வயது** | **:** |

**முதல் விசாரணை:–**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். 2 ம் பிரதிவாதி தெய்வாணையிடம் நான் 2010 ஆம் ஆண்டிலிருந்து கடந்த 15 வருடங்களாக வாடகைக்கு குடியிருக்கிறேன். இதுவரை நான் தெய்வாணை அம்மாவிடம் தான் வாடகை கொடுத்து வருகிறேன். மேலும் நான் வாடகைக்கு குடியிருக்கும் இடத்தில் 10 கடைகள் உள்ளது. அவர்கள் 10 பேரும் 2 ம் பிரதிவாதி தெய்வாணை அம்மாவிடம் தான் வாடகை கொடுத்து வருகிறார்கள்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

வாடகைக்கு குடியிருக்கும் சிலர் லாரி பட்டறைகள் வைத்துள்ளனர். நான் அங்கு கிரில் பட்டறை வைத்துள்ளேன். 1 ம் பிரதிவாதி நடராஜன் வழக்கு சொத்திற்கு இதுவரை வந்ததில்லை.

**<u>1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நீதிமன்றத்திலிருந்து அறிவிப்பு என் வீட்டு விலாசத்திற்கு தான் வந்தது கடை விலாசத்திற்கு வரவில்லை. வாடகைக்கு குடியிருப்பதை இன்று வரை நான் பதிவு செய்யவில்லை. நீங்கள் 15 வருடங்களாக தாவா சொத்தில் வாடகைக்கு இருப்பதாக கூறுவது தவறு என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்தில் கிரில் பட்டறை வைத்து வாடகைக்கு இருக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் இல்லாமல் மற்றும் 2ம் பிரதிவாதி தெய்வாணையிடம் 10 பேர் வாடகைக்கு இருப்பதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் தெய்வாணையம்மாளுக்கு சாதகமாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.23 18:06:53 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.

**முதன்மை மாவட்ட நீதிமன்றம், கரூர்.**

**அ.வ.எண்.33/2014**

2026–ம் வருடம் மார்ச் திங்கள் 23–ம் நாளன்று பிரதிவாதி தரப்பு சாட்சியாக பி.வா.சா.6–வது நபரின் வாக்குமூலம் (1969 ம் ஆண்டின் 54 விதியின்படி 95 வது பிரிவின்படி ஏற்பட்டுள்ளபடி திரு.பிரகாஷ், இளநிலை உதவியாளர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்யப்பட்டுள்ளது.

| | | | |
|---|---|---|---|
| **பெயர்.** | : பிரபு | **தொழில்** | : |
| **த/பெ.** | : | **வட்டம்** | : |
| **முகவரி** | : | **மதம்** | : |
| **ஜாதி** | : | **வயது** | : |

**முதல் விசாரணை:–**

நீதிமன்றத்திலிருந்து அழைப்பாணை வந்ததன் பேரில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். வாதி கோகுலும் நானும் ஒரே ஊர்க்காரர்கள் சிறுவயதிலிருந்து பழக்கமானவர்கள். பிரதிவாதி நடராஜன் அந்த ஊரில் தான் குடியிருந்து வருகிறாரா என்றால் சரிதான். அந்த ஊர்பெயர் சின்னகுளத்துப்பாளையம். பிரதிவாதி நடராஜனின் சொத்தும் அதே ஊரில் தான் உள்ளது. வாதி கோகுல் கோயமுத்தூரில் படித்தார் என்ன படித்தார் என்று தெரியாது. நானும் கோகுலும் நண்பர்கள் என்ற முறையில் வெளியில் சென்று வருவோம். 2011 ஆம் ஆண்டில் வாதி கோகுல் உங்களுக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். வாதி கோகுல் திருமணம் செய்து பணக்கஷ்டத்திற்காக என் பெயரில் பொது அங்கீகார பத்திரம்

எழுதிக்கொடுத்தார். எங்கள் வீட்டில் சண்டையாக இருந்ததால் பொது அதிகார பத்திரத்தை அன்றே ரத்து செய்து 1ம் பிரதிவாதி பெயருக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார். வாதி கோகுல் எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த போது மது போதையில் இருந்தார். வாதி கோகுல் 1ம் பிரதிவாதி நடராஜனுக்கு கிரையம் எழுதி கொடுத்த சமயத்தில் என்னை அழைத்தார். 1ம் பிரதிவாதி நடராஜன் காரில் வைத்து வாதி கோகுலிடம் பத்திரத்தில் கையெழுத்து வாங்கினார். 1ம் பிரதிவாதி நடராஜன் கையெழுத்து வாங்கும்போது வாதி கோகுல் மது போதையில் இருந்தார். அப்போது நடராஜனுடன் அவரது உறவினர்கள் சிலர் இருந்தார்கள். நடராஜ் கோகுலுக்கு பணம் கொடுத்தாரா என்று நான் பார்க்கவில்லை.

**<u>வாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

வாதி கோகுல் 2ம் பிரதிவாதி தெய்வாணைக்கு சொந்த மகன் அல்ல. கோவிலிலிருந்து கண்டெடுத்து வளர்த்து வந்தார். வாதியை கோவிலிலிருந்து எடுத்து வந்த விவரம் அக்கம் பக்கத்தில் உள்ள அனைவருக்கும் தெரியும். 1ம் பிரதிவாதி நடராஜன் எனது பக்கத்து ஊர்க்காரர். அவரை விவரம் தெரிந்ததிலிருந்து எனக்கு நன்றாக தெரியும். நடராஜனுடன் ஆரம்பத்திலிருந்தே நல்ல பேச்சு வார்த்தையில் தான் உள்ளேன். வாதி கோகுல் 2ம் பிரதிவாதி தெய்வாணையின் வளர்ப்பு மகன் என்று 1ம் பிரதிவாதி நடராஜனுக்கு நன்கு தெரியும். கோகுலே எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதி வைத்தார். எங்கள்

வீட்டில் இது குறித்து பிரச்சனை வந்ததால் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்துவிட்டார். கோகுல் உங்களுக்கு பொது அதிகார பத்திரத்தை தன்னிச்சையாக எழுதிவைக்கவில்லை என்றும் 1ம் பிரதிவாதி நடராஜனின் தூண்டுதலினால் தான் உங்களுக்கு பொது அதிகார பத்திரம் எழுதி வைத்தார் என்று சொன்னால் சரியல்ல. 1ம் பிரதிவாதி நடராஜன் தான் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்ய சொன்னார் என்று சொன்னால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் ரத்து செய்த அன்று 1ம் பிரதிவாதி நடராஜன் பெயரில் கிரையம் செய்த விவரம் எனக்கு தெரியும். அப்போது வாதி கோகுலின் உறவினர்கள் யாரும் அவருடன் இல்லை. 1ம் பிரதிவாதி நடராஜனுடன் அவர் சம்மந்தப்பட்ட ஆட்கள் உடன் இருந்தார்க்ள். கிரையம் சம்மந்தமாக வழக்குச்சொத்தின் அசல் ஆவணங்கள் நடராஜன் வசம் இருந்ததா என்றால் இல்லை. வாதி கோகுல் காரில் வைத்து தான் கையெழுத்து போட்டார் சார்பதிவாளர் முன்பு போடவில்லை. இரண்டு சார்பதிவாளர் அலுவலகங்களிலும் வெளியில் காரில் வைத்து தான் கையெழுத்து செய்தார். 1ம் பிரதிவாதி நடராஜன் பதிவாளர் முன்னிலையில் கிரையத்தொகை வாதியிடம் கொடுத்தாரா என்றால் கொடுக்கவில்லை மது போதையில் இருந்தார். 1ம் பிரதிவாதி வாதிக்கு கிரையதொகையை வெளியில் எதுவும் வைத்து கொடுத்தாரா என்றால் இல்லை. எனக்கு சன்மானம் எதுவும் 1ம் பிரதிவாதி நடராஜன் கொடுத்தாரா என்றால் இல்லை. கிரையம் செய்த பின்னிட்டு வாதி கோகுல் நடராஜனுடன் தான் சென்றார். வாதி கோகுலை

நடராஜன் தான் கட்டாயப்படுத்தி தான் அழைத்துச்சென்றார் என்று சொன்னால் காரில் அழைத்துச்சென்றார். வாதியை நடராஜன் அழைத்துச்செல்லும்போது நடராஜனின் ஆட்கள் அவருடன் இருந்தார்கள். வாதியை நடராஜன் எங்கு அழைத்துச்சென்றார்கள் என்ற விவரம் தெரியுமா என்றால் நடராஜனின் Guest House க்கு அழைத்துச்சென்றார்கள். இது சம்மந்தமாக காவல்துறையில் புகார் கொடுத்து உங்கள் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்று சொன்னால் சரிதான் பின்னர் வழக்கை வாபஸ் வாங்கினார்கள். வாதி கோகுல் கொடுத்த புகாரின் அடிப்படையில் குற்ற எண்.31/2011—ல் முதல் தகவல் அறிக்கை உங்கள் பெயரிலும் சேர்த்து பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான்.

**1ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் அம்மாவுடைய கந்து பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். உங்கள் அம்மா பைனான்ஸ் செய்வதற்கு லைசென்ஸ் எதுவும் பெறவில்லை என்றால் சரிதான். அனுமதி பெறாமல் பைனான்ஸ் செய்து வருவதற்கு உங்கள் மீது இதுவரை யாரும் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். கடந்த 20 வருடங்களாக பைனான்ஸ் தொழில் செய்து வருகிறேன். நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் சரியான பத்திரங்களை தான் ஏற்படுத்திக்கொள்வேன். வாதி கோகுல் பொதுஅதிகார பத்திரம் எழுதிக்கொடுக்கும்போது தானாக பொதுஅதிகார பத்திரம் தான் எழுதிக்கொடுப்பது என்பது தெரிந்து எழுதிக்கொடுத்தார். வாதி கோகுல் 2ம் பிரதிவாதி தெய்வாணையின் விருப்பத்திற்கு மாறாக காதல்

கதிருமணம் செய்து கொண்டதால் தான் வாதிக்கும், தெய்வாணைக்கும் பிரச்சனை ஏற்பட்டு அவருக்கு பணப்பிரச்சனை ஏற்பட்டது என்று சொன்னால் சரிதான். சொத்தை விற்றால் பணம் வரும் அதை வைத்து பிரச்சனையை சரிசெய்யலாம் என்று இருந்தாரா என்றால் சரிதான். என் வீட்டில் பிரச்சனை வந்ததால் நான் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்து கொடுத்தேன். நான் கோகுலை ஏமாற்ற வேண்டி பொது அதிகார பத்திரம் பெறவில்லை. வாதி கோகுல் சொத்தை நீங்கள் ஏன் விற்று பணம் தர வேண்டும் என்று என் வீட்டில் பிரச்சனை வந்தது. பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கும்போது சார்பதிவாளர் கோகுலிடம் பொது அதிகார பத்திரம் தான் எழுதிக்கொடுக்கிறீர்களா என்று கேட்டாரா என்றால் கேட்டார். பொது அதிகார பத்திரம் எழுதிக்கொடுத்த பின்பு வெங்கமேடு காவல்நிலையத்தில் கோகுலையும், உங்களையும் விசாரித்தார்களா என்றால் ஆமாம். அவ்வாறு விசாரித்த நாள் பொது அதிகார பத்திரம் ரத்து செய்த அடுத்த நாளா என்றால் எனக்கு தெரியவில்லை. வெங்கமேடு காவல்நிலையத்தில் நீங்கள் வாக்குமூலம் அளித்தபோது பொதுஅதிகார பத்திரம் ரத்து செய்த போது கோகுல் மதுபோதையில் இருந்தார் என நான் கூறவில்லை. காவல்துறை விசாரணையின் போது கோகுலே பொது அதிகார பத்திரத்தை அவராக ரத்து செய்ய சொன்னார் என்று வாக்குமூலம் அளித்துள்ளீர்கள் என்றால் இல்லை வீட்டில் பிரச்சனை என்பதால் நான் தான் ரத்து செய்தேன். கோகுலை நீங்கள் கடத்தியதாக குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் உங்கள் மீது

C.C.No.195/2020 வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். பொது அதிகார பத்திரம் ரத்து செய்யும் போது கோகுல் மது போதையில் இருந்ததாக நீங்கள் சொல்வது தவறு என்று சொன்னால் பொது அதிகார பத்திரம் ரத்து செய்யும்போது மது அருந்தவில்லை இயல்பாக இருந்தார் கிரையப்பத்திரம் செய்யும்போது தான் மது அருந்தியிருந்தார். கிரையம் பத்திரத்தில் நான் சாட்சியாக கையொப்பம் செய்யவில்லை. பொது அதிகார ரத்து பத்திரமும், கிரையப்பத்திரமும் ஒரே சார்பதிவாளர் அலுவலகத்தில், ஒரே நாளில் ஒரே நேரத்தில் தான் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் எனக்கு பொது அதிகாரம் ரத்து செய்தவுடன் நான் சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து சென்றுவிட்டேன் அதன்பிறகு கிரையம் ஆவணம் பதிவு செய்தது பற்றி எனக்கு தெரியாது. சாட்சி தானாக பின்வருமாறு கூறினார் அதற்கு பிறகு காரில் பத்திரம் வைத்திருந்தார்கள் அதில் கோகுலிடம் கையொப்பம் பெற்று கொண்டிருந்தார்கள். பொது அதிகார பத்திரம் ரத்து செய்தவுடன் நான் என் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிறகு என்னை 1ம் பிரதிவாதி நடராஜன் அழைத்தார். நான் வீட்டிற்கு சென்ற பிறகு 1 மணி நேரம் கழித்து வந்தேன். எனது வீட்டிற்கு நான் இருசக்கர வாகனத்தில் சென்றேன். வீட்டிற்கு செல்ல எனக்கு 5 நிமிடம் ஆனது. கிரையபத்திரம் செய்யும்போது உங்களை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அழைக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. எத்தனை ரூபாய்க்கு கிரையம் பேசி முடிக்கப்பட்டது என்றும், முத்திரை தாள்

எவ்வளவு ரூபாய்க்கு வாங்கப்பட்டது என்றும் கிரையத்திற்கு யார் சாட்சியாக இருந்தாக்ள் என்று எனக்கு தெரியாது. பொது அதிகார பத்திரம் ரத்து செய்வதற்கு முன்பு சார்பதிவாளர் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்கிறீர்களா என்று கேட்டு ஆமாம் என்று சொன்ன பிறகு தான் பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்தார்கள். கோகுல் சார்பதிவாளரிடம் கிரைய ஆவணத்தை பதிவு செய்யும் போது நான் அங்கு இல்லை. உங்கள் மேலுள்ள குற்றவியல் வழக்கு விசாரணைக்கு வரவில்லை என்றால் சரிதான். மேற்சொன்ன குற்றவியல் வழக்கு உங்கள் மீது நிலுவையில் உள்ளதால் உங்களை மிரட்டி வாதிக்கும், 2ம் பிரதிவாதிக்கும் சாதகமாக சாட்சியம் அளிக்க கூறியுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. வாதி கோகுல் முறையான கிரையத்தொகையை பெற்றுக்கொண்டுதான் 1ம் பிரதிவாதி நடராஜனுக்கு கிரையம் கொடுத்துள்ளார் என்று சொன்னால் கொடுக்கவில்லை பணம் வாங்கியிருந்தால் கோகுல் என்னிடம் கூறியிருப்பார். எனக்கு மூலிமங்கலம் பழனிச்சாமி மகன் மோகன்ராஜை தெரியும். மோகன்ராஜ் வேலாயுதம்பாளையம் காவல்நிலையத்தில் 1ம்பிரதிவாதி நடராஜன் மற்றும் சிலர் மீது கோகுலை கடத்தி சென்றதாக புகார் கொடுத்த விவரம் தெரியுமா என்றால் தெரியும். காவல்ஆய்வாளரிடம் கோகுல் தான் 1ம் பிரதிவாதி நடராஜனிடம் 2 கோடி ரூபாய் பணம் பெற்றுக்கொண்டுதான் கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்ததாக சொல்லியுள்ளார் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. 1ம் பிரதிவாதியிடமிருந்து வாதி கோகுல் பணம் பெறவில்லை

என்று என்னிடம் கூறவில்லை என்பதால் தான் நான் மேற்படி கிரையத்திற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்று சொல்கிறேன். கிரையம் முறையான பிரதிபிரயோஜ்னத்திற்கு வாதி கோகுலால் எழுதிக்கொடுக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள், கோகுல், தெய்வாணையம்மாள் ஆகியோர் கள்ளக்கூட்டு சேர்ந்துகொண்டும் உங்கள் மேலுள்ள குற்றவியல் வழக்கிலிருந்து நீங்கள் தப்பிப்பதற்காகவும் 1ம் பிரதிவாதிக்கு எதிராக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. மேற்படி கிரையம் பத்திரம் பதிவு செய்யும் போது நீங்கள் சார்பதிவாளர் அலுவலகத்தில் இல்லை என்றும் மேற்படி கிரையம் நடவடிக்கைகளில் நீங்கள் கலந்துகொள்ளவில்லை என்றும் மேற்படி கிரையபத்திரத்தை பற்றி உங்களுக்கு நேரடியாக தெரியாது என்றால் காரில் பத்திரத்தில் கையெழுத்து வாங்கிய விவரம் மட்டும் தெரியும் இரண்டு சார்பதிவாளர் அலுவலகத்தில் கையெழுத்து வாங்கிய விவரம் தெரியும். இரண்டு சார்பதிவாளர் அலுவலகமும் பக்கம் பக்கமாக அருகில் உள்ளது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு சரி என்று ஒப்புக்கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

ELAVAZHAGAN

Digitally signed by ELAVAZHAGAN
Date: 2026.03.23 18:07:00 +0000

மாவட்ட நீதிபதி,
கரூர்.